இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 28-01-2025

# ‘இரும்பு மனிதர்’ ஆட்சியில் இரும்பின் காலத் தொன்மை வெளியாகி இருக்கிறது!

**2015** ஆம் ஆண்டு ‘நமக்கு நாமே’ என்ற மக்கள் சந்திப்புப் பயணத்தை தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் நிகழ்த்தினார்கள். அப்போது நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள், **“என் வீட்டில் பிறந்த மக்களில் இந்தக் குழந்தைக்குத் தான் ஸ்டாலின் என்று பெயரிட்டேன். ரஷ்யத் தலைவர் ஸ்டாலினுக்கு ஏன் இந்தப் பெயர் வந்தது தெரியுமா? ஸ்டாலின் என்றால் ‘இரும்பு மனிதர்’ என்று பொருள். எனவே, அந்தப் பெயரையே இந்தக் குழந்தைக்கு சூட்டினேன். அப்போதே எனக்குள் இந்தக் குழந்தை இரும்பு மனிதராக வருமென்ற உணர்வு ஏற்பட்டது. நான் நினைத்தபடியே ஸ்டாலின் இப்போது ஸ்டாலினாகவே உருவெடுத்துள்ளார். அவர் ஸ்டாலினாகவே நிர்வாகத்தை நடத்து வார். மக்களுக்கு நல்லுதவிகள் செய்வார்”** என்று பேசினார்கள்.

அத்தகைய சிறப்பு மிக்க ஆட்சியை வழங்கி வரும் முதலமைச்சர் அவர்கள் இரும்பு குறித்த கரும்பான செய்தியை வழங்கி இருக்கிறார்கள்.

**“தமிழ் நிலப்பரப்பில் இருந்து தான் இரும்பின் காலம் தொடங்கியது என்ற மாபெரும் மானுடவியல் ஆய்வுப் பிரகடனத்தை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக இந்திய நாட்டுக்கு மட்டுமல்ல உலகுக்கே நான் அறிவிக்கிறேன். 5,300 ஆண்டு களுக்கு முன்பே உருக்கு இரும்பு தொழில் நுட்பம் தமிழ் நிலத்தில் அறிமுகப்படுத் தப்பட்டு விட்டது.”** என்று தலைநிமிர்ந்து உலகுக்கு அறிவித்துள்ளார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

இரும்பு உருக்குதல், ஆயுதங்கள் செய்தல், வேளாண் உற்பத்திக்குத் தேவையான அடிப்படைக் கருவிகளை செய்தல் போன்ற தொழில்நுட்ப அறிவினைப் பெற்றிருந்தனர் என்பதை சங்க இலக்கியங்கள் எடுத்துரைக் கின்றன.

**“இரும்பு ஊது குருகின் இடந்து இரை தேரும்”**

**“இரும்பு செய் தொடியின் ஏர ஆகி”**

**“எஃகுறு மாந்தரின் இனைந்துகண் படுக்கும்”** - ஆகிய அகநானூறு நூலின் வரிகள் இரும்பை ஆயுதமாக்கும் முறையையும் பயனையும் விரிவாக எடுத்து ரைக்கின்றன.

இதுவரை நாம் பேசி வந்தது அனைத்தையும் பழம் பெருமைகள் என்றும், இலக்கியத்தில்தானே இருக்கிறது என்றும் சொல்லி வந்தார்கள். இதோ இதனை ஆய்வுப் பூர்வமாக மெய்ப்பித்து நாட்டுக்கு அறிவித்திருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வு களில் சேகரிக்கப்பட்ட மாதிரிகள் உலகின் தலைசிறந்த ஆய்வகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. புனே நகரிலுள்ள பீர்பால் சகானி தொல் அறிவியல் நிறுவனம், அகமதாபாத் நகரிலுள்ள இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகம் ஆகிய தேசிய அளவில் புகழ்பெற்ற ஆய்வு நிறுவனங்களும், பன்னாட்டளவில் உய ரிய நிறுவனமான அமெரிக்க நாட்டு புளோரிடா மாநிலத்திலுள்ள பீட்டா ஆய்வக மும் இதனை ஒப்புக் கொண்டுள்ளன. இந்த பகுப்பாய்வு முடிவுகள் இந்தியாவில் உள்ள தொல்லியல் அறிஞர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அவர்களும் ஏற்றுக் கொண்ட பிறகு தான் நாட்டுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 5,300 ஆண்டு களுக்கு முன்னர் தமிழ் நிலப்பரப்பில் இரும்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்பதை இவர்கள் அனைவரும் ஒப்புக் கொண்டுள்ளார்கள்.

**“விந்திய மலைக்கு வடக்கே அமைந்துள்ள பண்பாட்டு இடங்கள் செப்புக் காலத் தில் இருந்தபோது, விந்தியத்தின் தெற்கே வணிகத்திற்குப் பயன்படுத்தும் அளவிற்கு செப்புத் தாது குறைவாக கிடைத்தன. ஆனால், செம்பைவிட வலிமை யான இரும்பு பயன்பாட்டிற்கு வந்துவிட்டது. எனவே, வடஇந்தியாவின் செப்புக் காலமும் தென்னிந்தியாவின் இரும்புக் காலமும் சமகாலத்தவை” என்று இந்த ஆய்வு முடிவுகள் கூறுகின்றன.**

★ தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறையால் மேற்கொள்ளப்பட்டு வரும் அகழாய்வு முடிவுகள் பல்வேறு திருப்புமுனைகளை ஏற்படுத்தி யுள்ளன. தமிழ்நாட்டில் நகர நாகரிகமும். எழுத்தறிவும் கி.மு. ஆறாம் நூற்றாண்டளவிலே தொடங்கிற்று என்று கீழடி அகழாய்வு முடிவுகள் அறிவியல் அடிப்படையில் நிறுவியுள்ளன.

★ பொருநை ஆற்றங்கரையில் 3,200 ஆண்டுகளுக்கு முன்னர் வேளாண் பயிர்தொழிலில் நெல்பயிரிடப்பட்டுள்ளது என்பதை சிவகளை அகழாய்வு முடிவு வெளிப்படுத்தியது.

★ அதனைத் தொடர்ந்து கிருஷ்ணகிரி மாவட்டம் மயிலாடும்பாறை அகழாய்வின் மூலம் தமிழ்நாட்டில் இரும்பின் அறிமுகம் 4,200 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்றது என்ற செய்தியை தமிழ்நாடு சட்டமன்றத்தின் வாயிலாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் உலகிற்கு அறிவித்தார்கள். இப்போது இரும்பின் காலம் மிகத் துல்லியமாகக் கணிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் இப்போது செய்து வரும் ஆய்வு களின் மூலமாக கிடைக்கும் சான்றுகளும், அறிவியல் அடிப்படையிலான காலக் கணக்கீடுகளும் இதுவரை நாம் சொல்லி வந்த கருத்துகளை மீளாய்வு செய்யும் வகையில் அமைந்துள்ளன. அதனடிப்படையில் தான் தமிழ்நாட்டில் இரும்பு 5,300 ஆண்டுகளுக்கு முன் அறிமுகமாகி இருக்க வேண்டும் என்று ஆய்வுகள் ஒப்புக் கொண்டுள்ளன.

இரும்பின் அறிமுக காலத்தை நிறுவுவதற்கான ஆய்வில் உலகளவில் தொல்லியல் ஆய்வாளர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். இரும்புத் தொழில்நுட்பம் ஆசியா மைனரில் கி.மு.1000 ஆண்டுவாக்கில் தோன்றியதாக வும் பின்னர் உலகின் பல பகுதிகளுக்கு பரவியதாகவும் கருதப்பட்டது. இதனை வைத்து ஒவ்வொரு நாடும் ஆய்வு செய்து வருகிறது. தமிழ்நாட்டின் ஆய்வு இதன் காலத்தை 5300 ஆண்டுகளாகக் கணித்துள்ளது.

**இதனை கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தின் தெற்காசிய தொல்லியல் துறை பேராசிரியர் திலீப் குமார் ஏற்றுக் கொண்டுள்ளார். “இந்தக் கண்டுபிடிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது” என்று சொல்லி இருக்கிறார். “கதிரியக்கக் காலக்க ணக்கீடுகள் தமிழ்நாட்டு மாதிரிகள் காலத்தால் முந்தியவை என்பதை மெய்ப்பிக்கின் றன” என்று பாரீசில் உள்ள பிரென்சு தேசிய அறிவியல் ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் ஒஸ்மண்ட் போப்போராச்சி கூறியிருக்கிறார்.**

**இந்திய தொல்லியல் துறையின் முன்னாள் தலைமை இயக்குநர் முனைவர் ராகேஷ் திவாரி, “இந்திய தொல்லியல் துறையில் இது ஒரு திருப்புமுனை. இந்தக் காலக்கணக்கீடுகள் இந்தியாவிலும் உலகெங்கிலும் இரும்புத் தொழில் நுட்பத்தின் தொடக்க காலத்தை நிறுவுகின்றன” என்று சொல்லி இருக்கிறார். இப்படி உலகம் ஒப்புக் கொண்ட உண்மையைத்தான் நாட்டுக்கு அறிவித்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.**

‘முதலில் தோன்றியது குரங்கு என்றால், அதுவும் தமிழ் குரங்காகத் தான் இருக்கும்’ என்று சிலர் இங்கே கிண்டலடிப்பார்கள். அவர்களது வாய்க்கு இரும்புப் பூட்டு போட வைத்திருக்கிறது இரும்பின் ஆய்வு.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அவர்களை நேற்று முன்தினம் (26.1.2025) முகாம். அலுவலகத்தில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககத் தின் இயக்குநர் முனைவர் எஸ்.நாகராஜ முருகன் ஆகி யோர் சந்தித்து, 28.1.2025 முதல் 3.2 2025 வரை திருச் சிராப்பள்ளி மாவட்டம், மணப் பாறை சிப்காட் வளாகத்தில் நடைபெறவுள்ள பாரத சார ணர் மற்றும் சாரணிய வைர விழா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா ஜம்போரி நிறைவு விழா விற்கான அழைப்பிதழை வழங்கி, விழாவில் பங்கேற்க வேண்டுமென்று அழைப்பு விடுத்தார்கள்.

### 76வது குடியரசு தினவிழா - டெல்லியில் கோலாகலம்!

# தேசியக்கொடியை குடியரசுத் தலைவர் முர்மு ஏற்றி வைத்தார்!

## பல்வேறு மாநிலங்களின் கலாச்சாரம் – பாரம்பரியத்தை பறைசாற்றும் வகையில் அலங்கார ஊர்திகள் அணிவகுப்பு!

புதுடெல்லி, ஜன. 28 -

76வது குடியரசு தினத்தை யொட்டி, டெல்லியில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு தேசி யக்கொடியை ஏற்றி, முப்படை யினரின் அணிவகுப்பை ஏற் றார். விமானப்படையின் கண் கவர் வான் சாகச நிகழ்ச்சி களை அனைவரும் வியப்புடன் கண்டுகளித்தனர்.

நாட்டின் 76வது குடியரசு தினவிழா டெல்லியில் கோலாக லமாக நடைபெற்றது. குடியரசுத் தலைவர் மாளிகையில் இருந்து பாரம்பரிய முறைப்படி அழைத்து வரப்பட்ட குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவை பிரதமர் மோடி வரவேற்றார்.

சிறப்பு விருந்தினராக பங் கேற்க வருகை தந்த இந்தோ னேசியா அதிபரை பிரதமர் மோடி வரவேற்றார். இதைய டுத்து, இந்திய தேசியக் கொடியை குடியரசுத்தலைவர் திரவுபதி முர்மு ஏற்றினார்.

தொடர்ந்து, பல்வேறு மாநி லங்களின் கலாச்சாரம், பாரம்ப ரியத்தை பறைசாற்றும் வகை யில் அலங்கார ஊர்திகள் அணி வகுப்பு நடைபெற்றது. மாநில மற்றும்யூனியன்பிரதேசங்களின் 16 அலங்கார ஊர்திகள் இடம் பெற்றன. இஸ்ரோ, தேர்தல் ஆணையம், கப்பல் போக்கு வரத்து துறை, வெளியுறவுத் துறை, கலாச்சாரத்துறை உள் ளிட்ட 9 ஒன்றிய அரசு துறை ஊர்திகளின் அணிவகுப்பும் நடைபெற்றது.

குடியரசு தின விழாவின் நிறைவாக, அனைவரையும் வியக்க வைக்கும் வகையில் முப்படைகளின் சாகச நிகழ்ச்சி கள் நடைபெற்றது. ராணுவ வீராங்கனைகள் இருசக்கர வாகனத்தில்சாகசநிகழ்ச்சிகளில் ஈடுபட்டு அசத்தினர். தொடர்ந்து, விமானப்படை சார்பில் கண் கவர் வான் சாகச நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அணிவகுப்பில் 51விமானப்படை விமானங்கள் சாகச கண்காட்சியில் பங்கேற் றன. 2 ரஃபேல் விமானங்கள், சுகோய் விமானங்கள் உட்பட 29 பைட்டர் விமானங்கள் இடம் பெற்றன. 8 ராணுவ பயணிகள் விமானங்கள், 13 நவீன ஹெலி காப்டர்களும் பங்கேற்றன.

### பத்மபூஷன் - பத்மஸ்ரீ விருதுகளுக்குத் தேர்வாகியுள்ள

# தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜன. 28-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

தமிழ்நாட்டில் இருந்து ஒன் றிய அரசின் பத்ம பூஷன் விரு துக்குத் தேர்வாகியுள்ள நடிகர் அஜீத்குமார், நல்லி குப்புசாமி, ஷோபனா சந்திரகுமார் ஆகிய மூவருக்கும்;

பத்மஸ்ரீ விருதுக்குத் தேர்வாகி யிருக்கும் அஸ்வின், குருவாயூர் துரை, தாமோதரன், லக்ஷ்மிபதி ராமசுப்பையர், எ.டி.ஸ்ரீனி வாஸ், புரிசை கண்ணப்ப சம்பந்தன், ஆர்.ஜி.சந்திரமோகன், ராதா கிருஷ்ணன் தேவசேனாபதி, சீனி விஸ்வநாதன், வேலு ஆசான் ஆகியோருக்கும் எனது நெஞ்சார்ந்த பாராட்டுகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

தத்தமது துறைகளில் தாங் கள் மென்மேலும் உயரங் களை அடைய வேண்டும், தமிழ்நாட்டுக்குப் பெருமை சேர்க்க வேண்டும் என வாழ்த்து கிறேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### புதுக்கோட்டை தெற்கு மாவட்ட மாணவர் அணி சார்பில்

# கடியாப்பட்டியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை! ஆர்.எஸ்.பாரதி – கே.கே.செல்லப்பாண்டியன் – சூர்யா வெற்றிக்கொண்டான் சிறப்புரை!

புதுக்கோட்டை, ஜன. 28 –

கழக இளைஞர் அணிச் செய லாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு துணை முதல மைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை தி.மு.க. கட்சியைச் சேர்ந்த ஒவ்வொரு அணியினரும் மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி கொண்டாடி வருகின்றனர்.

இதன் அடிப்படையில் புதுக் கோட்டை தெற்கு மாவட்ட மாணவ ரணி சார்பில் துணை முதலமைச் சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவி வழங்கும் விழா கடியாபட்டி யில் நடைபெற்றது.

விழாவிற்கு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை வகித்தார். மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை, ஒன்றியச் செயலாளர்கள் பொன்.ராமலிங்கம், வி.ஆர்.இளையராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னதாக மாவட்ட மாணவ ரணி அமைப்பாளர் ஆ.கலைச் செல்வன் வரவேற்புரையாற்றினார். நிகழ்ச்சியில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை நலத்திட்ட உதவிகள் வழங்கி பேசுகையில்,

சிவகங்கை மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை பார்த்து புதுமைப்பெண் திட்டத்தால் பயன டைந்த மாணவிகள் யாரும் அவரை தலைவர் என்று அழைக்க வில்லை அப்பா அப்பா என்று அன்போடு அழைத்தார்கள்.

எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சராக இருக்கும்போது யாராவது இப்படி அழைத்தது உண்டா. காரணம் என்னவென் றால் அந்த ஆயிரம் ரூபாயின் மதிப்பு மாணவிகளுக்கு தெரியும். தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்ததைப் போல நான்காண்டு கள் முதலமைச்சராக இருந்த எடப்பாடி பழனிச்சாமி எதையாவது செய்தது உண்டா? புதுமைப்பெண், விடியல் பயணம் போன்ற எண்ணற்ற திட்டங்களை முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த நான்கு ஆண்டுகளில் செய்து காண்பித்துள்ளார்.

மகளிர் உரிமைத் தொகை விடுபட்ட பெண்களுக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நடப்பு பட்ஜெட் தொடரில் வழங்க உறுதி அளித்துள்ளார். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் 40 க்கு 40 வெற்றி பெற்றோம் என்றால் அதற்குப் பெண்கள் ஓட்டு தான் காரணம். எம்.ஜி.ஆரை இவங்க படத்தில் தான் பார்த்திருப்பாங்க நான் எம்.ஜி.ஆர். கூட ஒரே தட்டில் உட்கார்ந்து சாப்பிட்டு இருக்கேன். எம்.ஜி.ஆர். போட்டியிட்ட முதல் தேர்தலில் என் பணத்தில் தான் டெபாசிட் கட்டினேன். அவரிடம் பணம் இல்லாமல் அல்ல அவர் மீது உள்ள பாசத்தால் 1965–ல் நான் எம்.ஜி.ஆரின் செயலாளராக இருந்தேன். எம்.ஜி.ஆர். தி.மு.க. வில் இருந்த போது தி.மு.க.விற்கு தான் பெண்கள் அப்போது ஓட்டு போட்டார்கள். எம்.ஜி.ஆர். போன பிறகு நான் ஓட்டு கவுண்டிங்க்கு போறதே கிடையாது காரணம் என்னவென்றால் ஆண்கள் பெட்டியை உடைத்தால் ஓட்டுகள் முழுவதும் உதயசூரியனுக்கு விழும், பெண்கள் பெட்டியை உடைத்தால் இலை சின்னத்தில் விழும் என நான் ஓப்பனாக சொல்கிறேன் என தெரிவித்தார். 1971–க்கு பிறகு கடந்த நாடாளு மன்ற தேர்தலில் போதுதான் கவுண்டிங் ஏஜெண்டாக டி.ஆர். பாலு அழைத்ததன் பேரில் சென்றேன். அப்போது இவிஎம் மிஷினை திறந்து பார்த்த போது 60% ஆண்கள் ஓட்டும், 85 முதல் 90 சதவீத பெண்கள் ஓட்டு தி.மு.க விற்கு விழுந்துள்ளது. அப்போது தான் நினைத்தேன் எம்ஜிஆருக்கு பிறகு தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றொரு எம்.ஜி.ஆராக மாறிவிட்டார் என்பது உண்மை என்பதை அறிந்தேன் என பேசினார்.

நிகழ்ச்சியில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன், தலைமைக் கழகப் பேச்சாளர் சூர்யா வெற்றிக் கொண்டான், ஒன்றியச் செயலாளர்கள் ஆறு. சிதம்பரம், பொன்.கணேசன், அரு வடிவேல், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, பொதுக்குழு உறுப்பினர் கலை வாணி சுப்பிரமணியன், மாவட்ட அமைப்பாளர்கள் மேகநாதன், கே. ஆர்.ராமசாமி, தேவி,மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் கார்த்திக் குமார், ஆர்.எஸ்.ராஜ பெரியண்ணன், பி.எல்.ராஜ மாணிக்கம், ஜெய கிருஷ்ணராஜ், மேகலா முத்து, ஒன்றிய துணைச் செயலாளர் கார்த்திக், கிளைச் செயலாளர்கள் நாராயணன், முத்துச்செல்வம், மாவட்டக் கழக பிரதிநிதி ராதாகிருஷ்ணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

அரிமளம் வடக்கு ஒன்றிய அவைத் தலைவர் பெரியசாமி நன்றி கூறினார்.



புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில், உயர்நிலை மற்றும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு மாணாக்கர்களுக்கான சிறப்பு கையேட்டினை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் மாணவிகளுக்கு வழங்கினார்.